040

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை
**EPU 5354 – ஆரம்பக் கல்விக்கான அழகியல்**
**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.**
**இரண்டு (02) மணித்தியாலங்கள்**

திகதி : **11/02/2023** | நேரம்: பி.ப 1.30 – பி.ப 3.30

## பகுதி I

1. ஆரம்ப பிரிவு வகுப்பாசிரியர் அழகியல் கல்வியினைப் பற்றி அறிந்திருக்க வேண்டியதன் அவசியம் யாது? விளக்குக.

2. ஆரம்ப பாடசாலை மாணவர்களின் மனவெழுச்சிக்கு கவிதை எவ்வாறு பங்களிப்பு செய்கின்றதென்பதை சுருக்கமாக விளக்குக.

3. ஆரம்ப வகுப்பறையில் ஆக்கபூர்வமான (Creative) செயற்பாடுகளை திட்டமிடுவதில் ஆசிரியர் எதிர்கொள்ளும் **ஐந்து (05)** சவால்களைக் குறிப்பிடுக.

4. ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு நடனம் என்ற பாடத்தின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.

5. “வெளிப்பாடு” (Manifestation) என்பதை சுருக்கமாக விபரிக்குக.

6. பிள்ளைகள் தமது ஆரம்ப கால கட்டத்தில் வரைதல் செயன்முறை மூலம் பெற்றுக்கொள்ளும் **ஐந்து (05)** திறன்களைக் குறிப்பிடுக.

7. பன்முக நுண்மதிக் கோட்பாட்டுடன் தொடர்புடைய **எட்டு (8)** வகையான நுண்மதிகளைக் குறிப்பிடுக.

8. சிறுவர் சித்திரத்தின் முதல் படிநிலையினைக் குறிப்பிட்டு அதன் முக்கிய பண்புகளை விபரிக்குக.

**(5x8= 40 புள்ளிகள்)**

## பகுதி II

09.

i. மாணவர்களின் முழு விருத்திக்கு (Total Develepment) அழகியல் மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது? விபரிக்குக.

(08 புள்ளிகள்)

ii. விகொட்ஸ்கியின் கல்வி தத்துவத்தினடிப்படையில் ஆரம்பக்கல்வியில் அழகியல் கல்விக்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கு ஏற்ற விடயங்களை உதாரணங்கள் மூலம் ஆராய்க.

(12 புள்ளிகள்)

10.

i. நிகழ்நிலை (Online) முறையின் மூலம் ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளைத் திட்டமிடுவதில் ஆசிரியர் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களைக் குறிப்பிடுக. அச் சவால்களை மேற்கொள்வதற்குரிய ஆலோசனைகளை முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

ii. ஆரம்பப் பிரிவு வகுப்பறையில் அழகியல் மற்றும் ஆக்கபூர்வமான நிகழ்வுகளை வடிவமைப்பதில் ஆசிரியரின் வகிபங்கினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(12 புள்ளிகள்)

11.

i. 'ஆரம்பப் பிரிவு மாணவர்களின் படைப்பாற்றல் விருத்திக்கு நடனப் பாடம் மகத்தான பங்களிப்பினை செய்கிறது.' இக்கூற்றினை பொருத்தமான உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

ii. 'ஆரம்பப் பிரிவு மாணவர்களின் நடனத்திறனை மேம்படுத்தவதில் ஆசிரியர் எதிர்கொள்ளும் நான்கு (04) சவால்களை பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக.

(12 புள்ளிகள்)

12.

i. "கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பங்களிப்பு செய்வதற்கு ஆரம்ப வகுப்பறையில் நாடகம் ஒரு பாடமாக உள்ளது." இப்பொருத்தப்பாட்டினைப் பற்றி விவாதிக்குக.

(08 புள்ளிகள்)

ii. நாடகப் பாடத்துடன் தொடர்புடைய பல்வேறு எண்ணக்கருக்களை முதன்மைப்படுத்துவதன் மூலம் மாணவர்களிடம் எவ்வாறு மகிழ்ச்சியை மேம்படுத்தலாம் என்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

13.

i. பிள்ளைகளின் சிறுவர் சித்திரத் திறன்களை இலகுபடுத்தி விருத்திசெய்வதில் ஆசிரியரின் வகிபங்கினைப் பற்றி கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

ii. பன்முக நுண்மதிக் கோட்பாட்டுடன் தொடர்புடைய நுண்மதியொன்றினைத் தெரிவுசெய்து, ஆரம்ப நிலை பிள்ளைகளில் அவ் நுண்மதியினை விருத்திசெய்வதற்கு பொருத்தமான ஆக்கபூர்வமான செயற்பாடொன்றினை பரிந்துரை செய்க. அழகியல் கல்வி மூலம் அதன் நம்பகத் தன்மையினை பகுப்பாய்வு செய்க.

(12 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது